**மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றம், கோபிசெட்டிபாளையம்**

2026 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10- ம் நாள் திரு.S.இராமச்சந்திரன், B.L., மூன்றாவது கூடுதல் மாவட்ட நீதிபதி அவர்களின் முன்னிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் மற்றும் விதிகளின் படி உறுதிசெய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| O.S.No. | : 622/2024 | வா.சா. | : 1 |
| பெயர் | : திரு. செல்வகுமார் | | |
| த/பெ. | : திரு. பழனிச்சாமி | | |
| கிராமம் | : | சாதி | : |
| தாலுக்கா | : | சமயம் | : |
| வயது | : 72 | தொழில் | : |

**முதல் விசாரணை :**

நான் இந்த வழக்கில் வாதி. முதல் விசாரணைக்கான எனது சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாகத் தாக்கல் செய்கிறேன். மேற்படி பிரமாண வாக்குமூலத்தை எனது முதல்விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். 04-08-2023 தேதியிட்ட காசோலை எண். 431823 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகவும், 29-08-2023 தேதியிட்ட வழக்கறிஞா அறிவிப்பு வா.சா.ஆ.2 ஆகவும், அஞ்சல் ஒப்புகை அட்டை வா.சா.ஆ.3 ஆகவும், சௌத் இந்தியன் வங்கி வழங்கிய கணக்கு நகல் வா.சா.ஆ.4 ஆகவும், கடனுக்கு டீசல் வழங்கியதற்கான கணக்கு குறிப்புகள் வா.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யவேண்டுகிறேன். தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.